# கிழக்கு மாகாண, மாகாணப் பாடசாலைகளில் நிலவுகின்ற சிங்கள மற்றும் தமிழ் மொழிமூல ஆசிரியர் வெற்றிடங்களுக்காக (2023 மற்றும் 2024ம் ஆண்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் ஆட்சேர்ப்பு செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்ட வெற்றிடங்களில் மீதி வெற்றிடங்களுக்காக) இலங்கை ஆசிரியர் சேவை 3-I(அ) தரத்துக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை – 2025

கிழக்கு மாகாண, மாகாணப் பாடசாலைகளில் நிலவுகின்ற சிங்கள மற்றும் தமிழ் மொழிமூல ஆசிரியர் வெற்றிடங்களுக்காக (2023 மற்றும் 2024ம் ஆண்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் ஆட்சேர்ப்பு செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்ட வெற்றிடங்களில் மீதி வெற்றிடங்களுக்காக) இலங்கை ஆசிரியர் சேவை 3-I(அ) தரத்துக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சைக்காக இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் தகைமைகளை பூர்த்தி செய்துள்ள கிழக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாக கொண்ட பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி **19.05.2025** ஆகும். இப்பரீட்சை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதிக்கு பின்னர் விரைவில் கிழக்கு மாகாணத்தின் மூன்று நகரங்களில் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் நடாத்தப்படும்.

## 01. தகைமைகள் :

### 1.1 பொதுத் தகைமைகள் :

1.1.1. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

1.1.2. சிறந்த நல்லொழுக்கமும் சிறந்த உடல் உள ஆரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

1.1.3. **19.05.2025** ஆந் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும் 40 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

1.1.4. (அ). விண்ணப்ப முடிவுத் திகதிக்கு உடன் முன்னதாக மூன்று (03) வருடங்களோ அல்லது அதற்கு அதிக காலமோ தொடர்ச்சியாக கிழக்கு மாகாணத்தில் வசித்திருத்தல்.

**அல்லது**

(ஆ). விண்ணப்ப முடிவுத் திகதிக்கு உடன் முன்னதாக மூன்று (03) வருடங்களோ அல்லது அதற்கு அதிக காலமோ தொடர்ச்சியாக கிழக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாக கொண்ட ஒருவரை திருமணம் செய்து வேறு மாகாணத்திலிருந்து விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் இந்த மாகாணத்திற்கு வந்து வதிவது தொடர்பான அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஆவணங்களை சமர்ப்பிக்கக்கூடிய ஒருவராக இருத்தல் வேண்டும்.

**குறிப்பு :** மேலே 1.1.4.(அ) இன் கீழ் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் வதிவிடத்தை அத்தாட்சிப்படுத்துவதற்காக விண்ணப்ப முடிவுத் திகதிக்கு உடன் முன்னதாக மூன்று (03) வருடங்களுக்கான தேருநர் இடாப்பின் உறுதிப்படுத்தப்பட்ட பிரித்தெடுப்பிதழ்களுடன் கிராம அலுவலர் சான்றிதழையும் நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பிப்பதோடு, மேலே 1.1.4.(ஆ) இன் கீழ் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் தனது வதிவிடத்தை அத்தாட்சிப்படுத்துவதற்காக கிராம அலுவலர் சான்றிதழுடன் தனது துணையின் வதிவிடத்தை அத்தாட்சிப்படுத்துவதற்காக விண்ணப்ப முடிவுத் திகதிக்கு உடன் முன்னதாக மூன்று (03) வருடங்களுக்கான தேருநர் இடாப்பின் உறுதிப்படுத்தப்பட்ட பிரித்தெடுப்பிதழ்களுடன் கிராம அலுவலர் சான்றிதழையும் நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பிக்கும் கடப்பாடுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

### 1.2 கல்வித் தகைமைகள் :

1.2.1. இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு அமைவாக **19.05.2025** ஆந் திகதியன்று கற்பித்தல் நோக்கங்களிற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட சிறப்புத் துறைகளைச் சேர்ந்த பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தால் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனம் ஒன்றினால், வழங்கப்பட்ட பட்டம் ஒன்றை பெற்றிருக்க வேண்டியதுடன், ஒவ்வொரு விடயத்திற்காக இந்த அறிவித்தலில் **'இணைப்பு 01'** இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**மற்றும்,**

1.2.2. க.பொ.த (சா/த) பரீட்சையில் சிங்களமொழி அல்லது தமிழ்மொழி பாடத்தில் மற்றும் கணித பாடத்தில் கட்டாயம் சித்தியடைந்திருக்க வேண்டும்.

1.2.3. க.பொ.த (உ/த) பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும். **அல்லது** அதற்கு சமமான அடிப்படை தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமானதாகும்.

1.2.4. பட்டத்தை பெறுவதற்காக பயின்ற பிரதான பாடம் / பாடங்களுக்கு அமைவாக மாத்திரம் வெற்றிடம் நிலவும் பாடத்திற்காக விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பதாரிகள் உரிய பாடத்தை பிரதான பாடமாக பயின்றுள்ளனர் என்பது பெறுபேற்று விபரச்சான்றிதழில் குறிப்பிடப்படவில்லையெனின் விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்கும் பாடத்தை பிரதான பாடமாக பயின்றுள்ளனர் என்பதற்கான நிரூபணத்தை உரிய பல்கலைக்கழகம் / நிறுவனத்தின் மூலம் பெற்று நேர்முகப்பரீட்சையின்போது சமர்ப்பிக்க வேண்டும்.

1.2.5. பட்டம் சார்ந்த பாடம்/பாடங்கள் மற்றும் விண்ணப்பிக்கும் பாடம் தொடர்பிலான பிரச்சனை சம்பந்தமான இறுதி முடிவு கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் எடுக்கப்படும்.

## 02. ஆட்சேர்ப்பு முறை மற்றும் சேவை நிபந்தனைகள் :

2.1 இப்பதவி நிரந்தரமானதாகும். ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசினால் எதிர்காலத்தில் வகுக்கப்பட்டு மேற்கொள்ளப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு கீழ்ப்படிதல் வேண்டும்.

2.2 இந்த ஆட்சேர்ப்பு மாவட்ட ரீதியில் செய்யப்படும். விண்ணப்பதாரியின் நிரந்தர வதிவிட மாவட்டம் முதலாவதாக கருதப்படும். ஒரு மாவட்டத்தில் ஒரு பாடத்திற்காக நிலவும் வெற்றிடங்கள் அம்மாவட்டத்தை நிரந்தர வதிவிடமாக கொண்ட விண்ணப்பதாரிகளால் நிரப்பப்படும். அவ்வாறு வெற்றிடங்களை நிரப்பும் போது, குறித்த மாவட்டத்தில் குறித்த பாடத்திற்காக தகைமையான விண்ணப்பதாரிகள் இல்லாதவிடத்து, வேறு மாவட்ட விண்ணப்பதாரிகளின் புள்ளிகள் முன்னுரிமை அடிப்படையிலும் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள "விண்ணப்பிக்கும் மாவட்டம்" பகுதியில் பூர்த்தி செய்யப்பட்டுள்ள மாவட்ட முன்னுரிமை ஒழுங்கிலும் நியமனம் வழங்குவதற்கு கருத்தில் கொள்ளப்படும்.

2.3. ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்த அந்த பாடங்களுக்கான வெற்றிட எண்ணிக்கை **'இணைப்பு 01'** இல் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கமைவாக விண்ணப்பதாரிகளின் புள்ளிகள் முன்னுரிமை அடிப்படையிலும் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை அடிப்படையிலும் அவர்கள் 'இணைப்பு 01' குறிப்பிடப்பட்டுள்ள வலயங்களில் நியமிக்கப்படுவர். புள்ளிகள் முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படும் வலயத்தில் சேவையாற்ற வேண்டியது கட்டாயமானதோடு, எவ்வித காரணத்திற்காகவும் வேறு வலயத்திற்கு நியமனம் வழங்கப்படமாட்டாது.

2.4 முதல் நியமனம் வழங்கப்படும் பாடசாலையில் 08 ஆண்டுகள் கட்டாயமாக சேவையாற்ற வேண்டியதோடு எந்தவொரு காரணத்திற்காகவும் இடமாற்றம் பெறுவதற்காக முன்வைக்கப்படும் கோரிக்கைகள் கருத்தில் கொள்ளபடமாட்டாது. இது தொடர்பில் சேவை ஒப்பந்தமொன்றினை கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருடன் செய்து கொள்வதற்கு உடன்படுதல் வேண்டும்.

2.5 இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1885/38 இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பில் 7.2.3.4 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு அமைவாக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும் என்பதோடு பதவியுயர்வுகள் இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக்குறிப்புக்கு அமைவாக மேற்கொள்ளப்படும்.

2.6 அரச நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும், இலங்கை ஆசிரிய சேவை பிரமாணக் குறிப்பின் மூலம் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும், அப்பிரமாணக் குறிப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது இதற்குப் பின்னர் மேற்கொள்ளப்படும் மறுசீரமைப்புகளுக்கும் கட்டுப்பட்டு தேர்ந்தெடுக்கப்படும் பட்டதாரிகள் இலங்கை ஆசிரியர் சேவையின் 3-I (அ) தரத்திற்கு நியமிக்கப்படுவர். இந்தப் பதவிக்கு உரித்தான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் 2025.03.25 ஆந் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை 10/2025 இற்கு அமைவாக இருக்கும் என்பதோடு இந்த நியமனத்திற்கான சம்பள முறைமை **G.E. 1 - 2025** சம்பள வகுதியின் கீழ் மாதாந்தம் **ரூபா. 53,060 – 800x6 – 940x7 – 1080x2 – ரூபா. 66,600/-** ஆகும். பட்டதாரிகள் இச்சம்பள அளவுத்திட்டத்தின் 14 ஆவது படிநிலையாகிய **ரூபா. 64,440/-** இல் அமர்த்தப்படுவதோடு, அச்சுற்றறிக்கையின் **"அட்டவணை III"** க்கு அமைய சம்பளம் வழங்கப்படும்.

2.7 இந்த அறிவித்தலுக்கு அமைவாக வெற்றிடங்கள் நிலவுகின்ற பாடங்களுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளுக்காக, கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் எழுத்துமூலப் போட்டிப்பரீட்சை நடாத்தப்படும். இந்த எழுத்துமூலப் போட்டிப்பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரிகளில் புள்ளிகள் முன்னுரிமை அடிப்படை மற்றும் காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கையின்படி, நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர் (நேர்முகப்பரீட்சைக்கு புள்ளிகள் எதுவும் வழங்கப்படமாட்டாது). நேர்முகப்பரீட்சைக்கு தெரிவாகும் விண்ணப்பதாரிகளது பெயர்ப்பட்டியல் கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் வெளியிடப்படும். கிழக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவையின் அத்தியாயம் VII இன் 63ம் பந்திக்கு அமைவாக, எழுத்துமூலப்பரீட்சை மற்றும் பிரயோகப்பரீட்சையின் பெறுபேறுகள் இந்த ஆட்சேர்ப்பு தொடர்பாக இறுதி முடிவு எடுக்கப்படும் வரை வெளியிடப்படமாட்டாது. நேர்முகப்பரீட்சையில் ஆட்சேர்ப்பிற்கான தகைமைகள் காணப்படும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் பிரயோகப்பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவர். எழுத்துமூலப் போட்டிப்பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகள் மற்றும் பிரயோகப்பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் கூட்டுத்தொகையின் முன்னுரிமை வரிசை ஒழுங்கின்படி காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைவாக ஆட்சேர்ப்பு நடைபெறும்.

2.8 இந்த அறிவித்தலுக்கமைய ஆட்சேர்ப்பு செய்யப்படும் அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் முன்சேவை பயிற்சி (Preservice Training) பெற்றுத்தரப்படும்.

2.9 விண்ணப்பதாரியினால் விண்ணப்பிக்கப்படும் பாடம் பின்னர் எக்காரணம் கொண்டும் மாற்றப்படமாட்டாது. அதே போன்று அது தொடர்பாக முன்வைக்கப்படும் மேன் முறையீடுகள் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

2.10 அனைத்து விண்ணப்பதாரிகளும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னதாக பதவிக்கு ஏற்புடைய அனைத்து தகைமைகளையும் பூரணப்படுத்தியிருத்தல் கட்டாயமானதாகும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் கோரப்பட்டுள்ள தகைமைகளுக்குரிய பரீட்சைப் பெறுபேறுகள் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். பெறுபேறுகளை எதிர்பார்த்துச் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் தவறொன்றாக கருதப்படும் என்பதுடன் தகுதியற்றவர்களின் விண்ணப்பங்களும் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

2.11 அதேபோன்று இந்த அறிவித்தலில் கருத்தில் கொள்ளப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அந்த சந்தர்ப்பம் இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறித்துரைக்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு ஏற்புடையதாகும்.

**03. விண்ணப்பிக்கும் முறை :**

3.1 இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய A4 (21cmx29cm) அளவிலான தாளின் இரு பக்கங்களையும் **மட்டும்** உபயோகித்து, **இல 1.0 தொடக்கம் 5.2 வரை முதலாம் பக்கத்திலும், இல. 5.3 தொடக்கம் 11.0 வரை தாளின் இரண்டாம் பக்கத்திலும்** உள்ளடங்குமாறு விண்ணப்பங்களைத் தயாரித்துக் கொள்ளுதல் வேண்டும்.

3.2 **உரிய மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமையாதவையும், பிழையின்றி பூரணப்படுத்தப்படாதவையும், மாதிரி விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் பரீட்சைக் குறியீட்டு இலக்கமின்றியும், உரிய திகதிக்கு முன்னா் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாதவையும், உரிய விண்ணப்ப முடிவுத்திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ சமா்ப்பிக்கப்படாதவையும், முழுமையுறாதவையுமான விண்ணப்பங்கள் எதுவித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.** உரியவாறு விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யத்தவறுவதால் ஏற்படும் நட்டத்திற்கு விண்ணப்பதாரர்களே பொறுப்பாளிகளாவர். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். பூர்த்தி செய்யப்படுகின்ற விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக உள்ளதென்பதற்கு விண்ணப்பதாரியே பொறுப்பாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

3.3 **'இணைப்பு 01'** இல் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களுக்கான கல்வித்தகைமைகளை பார்வையிட்டு தங்களின் பட்டத்திற்குரித்தான பாடங்களுக்காக மாத்திரம் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும். ஒரு விண்ணப்பதாரிக்கு இரு பாடங்களுக்காக விண்ணப்பிக்க முடிவதோடு விண்ணப்பிக்க வேண்டிய பாடம் மற்றும் பாட எண்ணை சரியாக விண்ணப்ப படிவத்தில் சரியான இடத்தில் குறிப்பிட வேண்டும். விண்ணப்பதாரிகளால் தமது பெறுபேற்று விபரச்சான்றிதழின் (Academic Transcript) உறுதிப்படுத்தப்பட்ட பிரதி / பட்டச்சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டியதோடு அவ்வாறு உறுதிப்படுத்தப்பட்டு இணைத்து அனுப்பப்படாத விண்ணப்பங்கள் எவ்வித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படுவதோடு, இது தொடர்பாக பின்னர் சமர்ப்பிக்கப்படும் வேண்டுகோளோ முறைப்பாடோ எவையும் கருத்திற்கொள்ளப்படமாட்டாது.

3.4 விண்ணப்பதாரி நிரந்தர வதிவிட மாவட்டத்தை விண்ணப்பத்தில் தெளிவாக குறிப்பிடுவதோடு உரிய மாவட்டத்தில் வெற்றிடம் காணப்படாத பட்சத்தில் வேறு மாவட்டத்தில் சேவை புரிய விரும்பின் அந்த மாவட்டத்தை முன்னுரிமை ஒழுங்கில் விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும்.

3.5 விண்ணப்ப படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பமானது அரச பாடசாலை அதிபரினால் / பிரிவின் கிராம உத்தியோகத்தரினால் / சமாதான நீதவான் ஒருவரினால் / சத்திய பிரமாண ஆணையாளரினால் / சட்டத்தரணியால் / பிரசித்தி பெற்ற நொத்தாரிசு ஒருவரினால் / முப்படையின் அதிகாரம் உடைய உத்தியோகத்தரினால் / பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட உள்ள உத்தியோகத்தரினால் / அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவியிலுள்ள மாதாந்தம் ரூ. 41,580 அல்லது அதற்கு அதிகமான இணைந்தபடியை பெறும் பதவிநிலை உத்தியோகத்தரினால் / புத்த விகாரைக்குப் பொறுப்பாகவுள்ள பௌத்த விகாராதிபதி அல்லது தலைமை பிக்கு அல்லது வேறு மத பீடங்களுக்குப் பொறுப்பாகவுள்ள மதகுருமார், மதிப்பிற்குரிய வேறு சமயப் பெரியோர்கள் ஆகியோர்களில் ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

3.6 அரச / மாகாண சேவையிலுள்ள அலுவலரொருவர் விண்ணப்பிப்பதாயின், அவரது விண்ணப்பத்தினை தனது திணைக்களத்தலைவருடாக சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்திலுள்ள விண்ணப்பதாரியின் கையொப்பமானது, அவரது திணைக்களத்தின் பதவிநிலை உத்தியோகத்தர் / திணைக்களத்தலைவர் முன்னிலையில் இடப்பட்டு அதனை அப்பதவிநிலை உத்தியோகத்தர் / திணைக்களத்தலைவர் சான்றுப்படுத்தி திணைக்களத்தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்டு அனுப்பப்படுதல் வேண்டும்.

3.7 முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் **19.05.2025** ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்ப இறுதித்திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். நீங்கள் அஞ்சல் செய்த விண்ணப்பம் தொலைந்து போனால் அதற்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு பொறுப்பேற்கமாட்டாது. **(விண்ணப்பத்தை செயலாளரின் தனிப்பட்ட பெயருக்கு அனுப்புவதை தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.)**

செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணம்,
கன்னியா வீதி, வரோதயநகர், திருகோணமலை.

3.8 விண்ணப்பங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் "**EX/Rec/25/01**" என்பதை குறிப்பிடுதல் வேண்டும்.

**04. பரீட்சைக்கான அனுமதி :**

4.1 இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையுடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் எனும் முன் அனுமானத்துடன் விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதித்திகதியோ அல்லது அதற்கு முன்னரோ உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன், தவறின்றி பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவங்களை முன்வைத்த விண்ணப்பதாரிகளுக்கு மேற்படி பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்படும். பரீட்சைக்கு அனுமதி அட்டையை பெற்றுக்கொள்வதால் விண்ணப்பதாரி மேற்படி பதவிக்கான தகைமைகளைப் பெற்றுள்ளார் என ஏற்றுக்கொள்வதாக கருத முடியாது.

4.2 பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் தனது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையினைச் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

4.3 பரீட்சார்த்தி ஒருவர் தனக்கு குறித்தொதுக்கப்பட்ட பரீட்சை நிலையத்திலேயே பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். பரீட்சார்த்திகள் அனைவரும் குறித்த பரீட்சை நிலையத்திற்கான அனுமதி அட்டையில் கையொப்பத்தினை உறுதிப்படுத்தி அந்தப் பரீட்சைக்குத் தோற்றும் தினத்தில் உரிய மண்டபத்தின் மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். பரீட்சையினை நடத்துதல் சம்பந்தமாக பரீட்சை ஒழுங்கு விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். அந்த விதிமுறைகள் மீறப்படுமிடத்து மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் தண்டனைக்கு பரீட்சார்த்தி உட்படுதல் வேண்டும்.

**05. பரீட்சார்த்திகளின் ஆளடையாளம் :**

தான் தோற்றும் அனைத்துப் பாடங்கள் தொடர்பில் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சை மண்டபத்தில் தனது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக கீழ்க் குறிப்பிடப்படும் ஆவணங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை
ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு (பாஸ்போட்)
இ) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்

**06. பொய்யான தகவல்களை வழங்குவதற்குரிய தண்டனை :**

விண்ணப்பப்பத்திரங்களை பூர்த்தி செய்யும் போது மிக கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இப்பரீட்சை விதிகளின் படி எவரேனும் விண்ணப்பதாரியொருவர் பரீட்சையின் முன்னரோ பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலாவது தகைமையற்றவர் என தெரியவருமாயின், அவரின் பரீட்சார்த்தியுரிமை இரத்துச் செய்யப்படலாம். விண்ணப்பதாரியொருவர் சமர்ப்பிக்கின்ற ஏதேனும் தகவல் பொய்யானதென தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அவர் மாகாண சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

**07. பரீட்சை முறையும் பரீட்சை மொழி மூலமும் :**

இப்போட்டிப்பரீட்சை சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்ப படிவத்தினை சமர்ப்பித்ததன் பின்னர் மொழிமூலத்தை மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

**08. பாடத்திட்டம் :**

**8.1 எழுத்துப்பரீட்சை :**

இந்தப் பரீட்சைக்கான வினாப்பத்திரங்கள் இரண்டாகும். இந்த இரண்டு வினாப்பத்திரங்களும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு பல்தேர்வு மற்றும் சுருக்க விடைகளை எதிர்பார்க்கும் வினாக்களை கொண்டமைந்ததாகக் காணப்படும். அனைத்து விண்ணப்பதாரிகளும் இந்த இரு வினாப்பத்திரங்களுக்கும் தோற்றுதல் கட்டாயமானதாகும். பரீட்சையில் சித்தியடைவதற்கு ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் ஆகக் குறைந்தது 40 புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

**01.** உளச்சார்பு – காலம் 01 மணித்தியாலம் (100 புள்ளிகள்)

பரீட்சார்த்தி கொண்டுள்ள ஆசிரியத் தொழிலுக்கான திறமையினையும் தர்க்க ரீதியான சிந்தனை, தீர்மானம் எடுக்கும் ஆற்றல் என்பவற்றை அளவீடு செய்யும் நோக்கில் இந்த வினாப்பத்திரம் தயாரிக்கப்படும். பல்தேர்வு மற்றும் சுருக்க விடைகளை அளிக்கும் வகையில் 50 வினாக்களைக் கொண்டிருக்கும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

**02.** பொது அறிவு – காலம் 01 மணித்தியாலம் (100 புள்ளிகள்)

ஆசிரியத்துறைக்கு இயைபுடைய அந்தத்துறை தொடர்பான பொது அறிவு அத்துடன் / அல்லது தேசிய ரீதியில் இடம்பெற்ற மற்றும் இடம் பெறுகின்ற கல்வியின் போக்கு சம்பந்தமான பொது அறிவு மற்றும் கல்வியினை நவீனமயமாக்கல் சம்பந்தமான பொது அறிவினைப் பரீட்சிப்பதற்காக பல்தேர்வு மற்றும் சுருக்க விடைகளை அளிக்கும் வகையில் 50 வினாக்களைக் கொண்டிருக்கும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

**8.2 பிரயோகப்பரீட்சை :**

8.2.1. நேர்முகப்பரீட்சையில் தகைமை பெறும் விண்ணப்பதாரிகளுக்கு பிரயோகப்பரீட்சைக்காக விண்ணப்பதாரியினால் நியமனம் பெறுவதற்கு எதிர்பார்க்கும் பாடத்திற்குரிய தலைப்பின் கீழ் 05 நிமிட சமர்ப்பிப்பொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்காக கீழ் குறிப்பிடப்பட்டவாறு புள்ளிகள் வழங்கப்படும்.

| **பிரயோக பரீட்சையில் புள்ளி வழங்கப்படும் ஒப்பளவுகள்** | **உயர்ந்த பட்ச புள்ளி அளவு** | **சித்தியடைவதற்கு தேவையான புள்ளி அளவு** |
|---|---|---|
| 01 நோக்கம் மற்றும் பிரவேசம் | 05 | 02 |
| 02 ஆளுமை மற்றும் நிர்வாகம் | 05 | 02 |
| 03 தொடர்பு சாதனம் தொடர்பிலான விளக்கம் | 05 | 02 |
| 04 நேர முகாமைத்துவம் | 05 | 02 |
| 05 சமர்ப்பிப்புத் திறமைகள் | 05 | 02 |
| **மொத்தப் புள்ளிகள்** | **25** | **10** |

**09. பரீட்சைக்கட்டணம் :**

9.1 பரீட்சைக்கட்டணம் ரூபா. 1,000/- ஆகும். இக்கட்டணத்தை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதியோ அல்லது அதற்கு முன்னரோ செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணம் எனும் பெயருக்கு கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள ஏதேனுமொரு பிரதேச செயலகத்தில் பரீட்சைக்கட்டணத்தை செலுத்தி அதற்காக வழங்கப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டிவிட வேண்டும். (பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியொன்றினை எதிர்கால தேவைக்காக தன் வசம் வைத்துக்கொள்ளுதல் வேண்டும்.) எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணங்கள் மீள செலுத்தப்படாததுடன் இப்பரீட்சைக் கட்டணம் வேறு பரீட்சைகளுக்கு மாற்றுவதற்கும் இடமளிக்கப்படமாட்டாது. **அதேபோன்று காசுக் கட்டளைகளும் முத்திரைகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.**

9.2 பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் தனிப்பட்ட ரீதியில் பெறுபேறுகள் அனுப்பி வைக்கப்படுவதோடு www.ep.gov.lk என்ற கிழக்கு மாகாண இணையதளத்திலும் வெளியிடப்படும்.

10. பரீட்சை நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பிரதான நகரங்களும் அவற்றின் எண்களும் பின்வருமாறு :

| <u>நகரம்</u> | <u>நகர எண்</u> |
|---|---|
| திருகோணமலை | 01 |
| மட்டக்களப்பு | 02 |
| அம்பாறை | 03 |

**கவனிக்க :** ஒரு பரீட்சை நகரம் சார்பாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை குறையுமிடத்து இப்பரீட்சை அண்மையிலுள்ள பரீட்சை நகரத்திற்கு மாற்றப்படலாம்.

11. நேர்முகப்பரீட்சைக்கு குறித்த தினத்தில் சமூகமளிக்கத் தவறும் விண்ணப்பதாரிகளுக்கு பிறிதொரு தினத்தில் நேர்முகப்பரீட்சைக்கு சமூகமளிப்பதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

12. தனது தகைமைகளை சான்றுப்படுத்துகின்ற சகல ஆவணங்களையும் நேர்முகப்பரீட்சைக்குழுவிற்கு நேர்முகப்பரீட்சைக்கு சமூகமளிக்கும் தினத்திலேயே சமர்ப்பிக்க வேண்டும். நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பிக்காத ஆவணங்கள் தொடர்பில் பின்னர் எக்காரணம் கொண்டும் கவனம் செலுத்தப்படமாட்டாது.

13. இந்த அறிவித்தலில் ஏதாவது திருத்தங்கள் தேவையானவிடத்து அது தொடர்பில் கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியானதாகும். அத்துடன் ஏதாவது விசேட காரணத்தினால் பரீட்சை நடாத்த முடியாமல் போகுமிடத்து அது தொடர்பான இறுதி முடிவும் கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியானதாகும். அதேபோன்று இப்பதவிக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படும்போது, அவ்வெற்றிடத்தின் ஒரு பகுதியையோ அல்லது முழுமையாகவோ நிரப்புவது அல்லது நிரப்பாமல் விடுவது தொடர்பிலும், பட்டத்தின் வலுமை தொடர்பிலும் இறுதி முடிவு கௌரவ ஆளுநர் அவர்களின் ஆலோசனையின் படி கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும்.

**ஜே. லியாகத் அலி,**
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.

**திகதி : 17.04.2025**

## இணைப்பு 01 – பாட வெற்றிட பட்டியல்

| தொடர் இல | பாடம் | கல்வித்தகைமைகள் | வெற்றிடங்கள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | அம்பாறை | | மட்டக்களப்பு | திருகோணமலை | | பாடத்திற்கான மொத்த வெற்றிடம் |
| | | | சிங்களம் | தமிழ் | தமிழ் | சிங்களம் | தமிழ் | |
| 1 | ஆரம்பக்கல்வி (Primary) | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் சிங்களம்/ தமிழ் மொழி அல்லது சிங்களம் / தமிழ் மொழியியல் / உளவியல் / மெய்யியல் / சமூகவியல் பாடத்தில் குறைந்தது 30 சராசரி தர புள்ளி (Credits) பெற்றுள்ள இளமாணிப் பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் ஏதாவது பட்டமொன்றுடன் க.பொ.த.சாதாரண தரத்தில் ஆகக்குறைந்தது சிங்களம் / தமிழ் மொழி பாடத்தில் B சித்தியுடன் கணித பாடத்தில் C சித்தி மற்றும் ஆங்கில பாடத்தில் S சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும். | 1 | 2 | 3 | 1 | 6 | 13 |
| 2 | விஞ்ஞானம் (Science) | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் ஏதேனும் விஞ்ஞானஇளமாணிப் பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும். **அத்துடன்** க.பொ.த. உயர்தர பிரிவில் பௌதீக விஞ்ஞான பிரிவு / உயிரியல் விஞ்ஞான பிரிவில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். | 1 | --- | --- | --- | 1 | 2 |
| 3 | ஆங்கிலம் (English) | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் ஆங்கிலமொழியினை கற்றுள்ள பட்டம் ஒன்று / ஆங்கிலமொழி / ஆங்கில இலக்கியம் /ஆங்கிலமொழியியல் / ஆங்கிலம் தொடர்பில் TESL (Teaching English as Second Language) பாடத்தில் குறைந்தது 30 சராசரி தர புள்ளி (Credits) பெற்றுள்ள இளமாணிப் பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br>அல்லது<br>ஆங்கில மொழி மூலத்தில் ஏதேனும் பட்டத்துடன் மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற ஏதேனும் நிறுவனத்தில் HNDE (Higher National Diploma in English) உயர் தேசிய டிப்ளோமா பெற்றிருத்தல் வேண்டும். | 4 | --- | 2 | 1 | --- | 7 |
| 4 | சித்திரம் (Art) | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் சித்திரம் / கைவினை / சிற்பக்கலை பாடத்தில் குறைந்தது 30 சராசரி தர புள்ளி (credits) பெற்றுள்ள இளமாணிப் பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும். | 2 | --- | --- | --- | --- | 2 |
| 5 | சுகாதாரமும் உடற்கல்வியும் (Health and Physical Education | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் சுகாதாரமும் உடற்கல்வியும் பாடத்தில் குறைந்தது 30 சராசரி தர புள்ளி (credits) பெற்றுள்ள இளமாணிப் பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>ஏதேனும் ஒரு பட்டத்துடன் தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தினால் அங்கிகரிக்கப்பட்டு பெற்றுக்கொள்ளப்பட்ட விளையாட்டு தொடர்பான ஏதேனும் ஒரு வருடத்துக்கு குறையாத டிப்ளோமாவை பெற்றிருத்தல் வேண்டும். | --- | --- | --- | 1 | --- | 1 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | நூலக ஆசிரியர்கள் (Library in-charge Teachers) | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் நூலக அறிவியல்தொடர்பான பாடத்தில் குறைந்தது 30 சராசரி தர புள்ளி (credits) பெற்றுள்ள இளமாணிப் பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>நூலக அறிவியலை முக்கிய பாடமாகக் கொண்ட ஏதேனும் கலைமானி (பொது) பட்டம் பெற்றிருத்தல் வேண்டும் / ஏதேனும் பட்டத்துடன் தேசிய நூலக மற்றும் தகவல் அறிவியல் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட நூலக டிப்ளோமாவை பெற்றிருத்தல் வேண்டும். | --- | 1 | --- | --- | --- | 1 |
| 7 | இரசாயனவியல் (Chemistry) | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இரசாயனவியல் பாடத்தில் குறைந்தது 30 சராசரி தர புள்ளி (credits) பெற்றுள்ள இளமாணிப் பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும். | --- | 1 | 1 | --- | 1 | 3 |
| 8 | பௌதீகவியல் (Physics) | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பௌதீகவியல் பாடத்தில் குறைந்தது 30 சராசரி தர புள்ளி (credits) பெற்றுள்ள இளமாணிப் பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும். | --- | 2 | 1 | 3 | 2 | 8 |
| 9 | உயிரியல் (Biology) | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் உயிரியல் பாடத்தில் / உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல் (Bio System Technology) குறைந்தது 30 சராசரி தர புள்ளி (credits) பெற்றுள்ள இளமாணிப் பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும். | --- | 1 | --- | 1 | 1 | 3 |
| 10 | விவசாயம் (Agri Science) | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் விவசாயம் தொடர்பான பாடத்தில் குறைந்தது 30 சராசரி தர புள்ளி (credits) பெற்றுள்ள இளமாணிப் பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும். | 3 | --- | 1 | --- | --- | 4 |
| 11 | இணைந்த கணிதம் (Combined Maths) | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் ஏதேனும் கணிதம் தொடர்பான பாடத்தில் குறைந்தது 30 சராசரி தர புள்ளி (credits) பெற்றுள்ள இளமாணிப் பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும். **அத்துடன்** க.பொ.த. உயர்தர பிரிவில் பௌதீக விஞ்ஞான பிரிவில் (A/L Physical Science) சித்தியடைந்திருத்தல் வேண்டும். | --- | 1 | 2 | 1 | --- | 4 |
| 12 | பொறியியல் தொழில்நுட்பவியல் (Engineering Technology) | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பொறியியல் தொழில்நுட்பவியல் தொடர்பான பாடத்தில் குறைந்தது 30 சராசரி தர புள்ளி (credits) பெற்றுள்ள இளமாணிப் பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும். **அத்துடன்** க.பொ.த. உயர்தர பிரிவில் பொறியியல் தொழில்நுட்பவியல் பாடத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். | --- | 3 | 6 | 1 | 1 | 11 |
| 13 | உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல் (Bio system Technology) | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல் பாடத்தில் குறைந்தது 30 சராசரி தர புள்ளி (credits) பெற்றுள்ள இளமாணிப் பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும். **அத்துடன்** க.பொ.த. உயர்தர பிரிவில் உயிரியல் பாடம் / விவசாய விஞ்ஞானம் / உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல் பாடத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். | --- | 2 | --- | --- | --- | 2 |
| 14 | தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் (Science for Technology) | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் / பிரயோக விஞ்ஞானமாணிப் பட்டம் (Bsc Applied Science) / விஞ்ஞான இளமாணிப் பட்டத்துடன் ஏதேனும் பாடத்தில் குறைந்தது 30 சராசரி தர புள்ளி (credits) பெற்றுள்ள இளமாணிப் பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும். **அத்துடன்** க.பொ.த. உயர்தர பிரிவில் தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞான பாடம் / விவசாய விஞ்ஞான பாடத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். | --- | 2 | 3 | 2 | --- | 7 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 15 | பொது ஆங்கிலம் (General English) | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் ஆங்கிலமொழியினை கற்றுள்ள பட்டம் ஒன்று / ஆங்கிலமொழி / ஆங்கிலஇலக்கியம் /ஆங்கிலமொழியியல் / ஆங்கிலம் தொடர்பில் TESL (Teaching English as Second Language) பாடத்தில் குறைந்தது 30 சராசரி தர புள்ளி (Credits) பெற்றுள்ள இளமாணிப் பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>**அல்லது**<br><br>ஆங்கில மொழி மூலத்தில் ஏதேனும் பட்டத்துடன் மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற ஏதேனும் நிறுவனத்தில் HNDE (Higher National Diploma in English) உயர் தேசிய டிப்ளோமா பெற்றிருத்தல் வேண்டும். | 35 | 49 | 72 | 20 | 50 | 226 |
| 16 | உடற்கல்வியும் விளையாட்டும் (Physical Education & sports) | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் சுகாதாரமும் உடற்கல்வியும் பாடத்தில் குறைந்தது 30 சராசரி தர புள்ளி (credits) பெற்றுள்ள இளமாணிப் பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>**அல்லது**<br><br>ஏதேனும் ஒரு பட்டத்துடன் தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தினால் அங்கிகரிக்கப்பட்டு பெற்றுக்கொள்ளப்பட்ட விளையாட்டு தொடர்பான ஏதேனும் ஒரு வருடத்துக்கு குறையாத டிப்ளோமாவை பெற்றிருத்தல் வேண்டும். | --- | --- | --- | 2 | --- | 2 |
| 17 | அரங்கேற்றல் கலைகள் (Performing Arts) | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் அரங்கேற்றல் கலைகள் தொடர்பான பாடத்தில் குறைந்தது 30 சராசரி தர புள்ளி (Credits) பெற்றுள்ள இளமாணிப் பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>**அல்லது**<br><br>நாடகமும் அரங்கியலும் / நுண்கலை தொடர்பான பட்டம் ஒன்றை அரச அங்கீகாரம் பெற்ற பல்கலைகழகம் /ஏதேனும் நிறுவனத்தில் பெற்றிருத்தல் வேண்டும். | --- | --- | --- | 1 | --- | 1 |
| 18 | நிகழ்ச்சி முகாமைத்துவம் (Event Management) | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் நிகழ்ச்சி முகாமைத்துவம் / விருந்தோம்பல் முகாமைத்துவம் (Hospitality Management) தொடர்பான பாடத்தில் குறைந்தது 30 சராசரி தர புள்ளி (Credits) பெற்றுள்ள இளமாணிப் பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும். | --- | --- | 2 | --- | --- | 2 |
| 19 | உயர் தரம் - கலையும் கைப்பணியும் (A/L Arts and Crafts) | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் கலையும் கைப்பணியும் தொடர்பான பாடத்தில் குறைந்தது 30 சராசரி தர புள்ளி (Credits) பெற்றுள்ள இளமாணிப் பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும். | --- | --- | 1 | --- | --- | 1 |
| 20 | நவநாகரீக வடிவமைப்பு (Fashion Designing) | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் நவநாகரீக வடிவமைப்பு தொடர்பான பாடத்தில் குறைந்தது 30 சராசரி தர புள்ளி (Credits) பெற்றுள்ள இளமாணிப் பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>**அல்லது**<br><br>ஏதேனும் இளமாணிப் பட்டத்துடன் SLITA / ஏதேனும் நிறுவனத்தில் ஒரு வருடத்துக்கு குறையாத உரிய பாடத்திற்கான டிப்ளோமாவை பெற்றிருத்தல் வேண்டும். | --- | --- | 1 | 1 | 1 | 3 |
| 21 | நிலத்தோற்ற வடிவமைப்பு (Landscaping) | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் நிலத்தோற்ற வடிவமைப்பு தொடர்பான பாடத்தில் குறைந்தது 30 சராசரி தர புள்ளி (Credits) பெற்றுள்ள இளமாணிப் பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும். | 1 | 1 | 1 | 1 | --- | 4 |
| 22 | பிரயோக தோட்டக்கலை கற்கைகள் (Applied Horiticultural Studies) | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் தோட்டக்கலை (Horiticultural) தொடர்பான பாடத்தில் குறைந்தது 30 சராசரி தர புள்ளி (Credits) பெற்றுள்ள இளமாணிப் பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும். | --- | --- | --- | 1 | --- | 1 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 23 | கால்நடை உற்பத்தி தொழில்நுட்ப கற்கைகள் (Livestock Product Studies) | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் கால்நடை உற்பத்தி / விலங்கு வேளாண்மை தொடர்பான பாடத்தில் குறைந்தது 30 சராசரி தர புள்ளி (Credits) பெற்றுள்ள இளமாணிப் பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும். | --- | --- | 1 | --- | 1 | 2 |
| 24 | உணவு தயாரிப்பு தொழில்நுட்ப கற்கைகள் (Food Processing Studies) | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் உணவு பதப்படுத்தல் / உணவு தொழில்நுட்பம் / விவசாய விஞ்ஞானம் / உணவும் போசாக்கும்/ உணவு உற்பத்தி தொடர்பான பாடத்தில் குறைந்தது 30 சராசரி தர புள்ளி (Credits) பெற்றுள்ள இளமாணிப் பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும். | 1 | --- | --- | --- | --- | 1 |
| 25 | நீர்வள தொழில்நுட்ப கற்கைகள் (Aquatic Resource Studies) | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் / நிறுவனம் ஒன்றில் நீர்வளம் தொடர்பான பாடத்தில் குறைந்தது 30 சராசரி தர புள்ளி (Credits) பெற்றுள்ள இளமாணிப் பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும். | 1 | --- | 1 | --- | --- | 2 |
| 26 | பெருந்தோட்ட உற்பத்தி தொழில்நுட்ப கற்கைகள் (Plantation Product Studies) | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெருந்தோட்ட உற்பத்தி / விவசாய விஞ்ஞானம் தொடர்பான பாடத்தில் குறைந்தது 30 சராசரி தர புள்ளி (Credits) பெற்றுள்ள இளமாணிப் பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும். | 1 | --- | --- | --- | --- | 1 |
| 27 | நிர்மாண தொழில்நுட்ப கற்கைகள் (Construction Studies) | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் நிர்மாணத்தொழில்நுட்பம் தொடர்பான பாடத்தில் குறைந்தது 30 சராசரி தர புள்ளி (credits) பெற்றுள்ள இளமாணிப் பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>**அல்லது**<br><br>ஏதேனும் இளமாணிப் பட்டத்துடன் க.பொ.த. உயர்தர பிரிவில் பொறியியல் தொழில்நுட்பவியல் பாடத்தில் சித்தியடைந்திருத்தலுடன் NVQ 4 க்கு மேற்பட்ட சான்றிதழ்களுடன் கூடிய நிர்மாணத்தொழில்நுட்ப கல்வி தொடர்பான டிப்ளோமா ஒன்றை அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் பெற்றிருத்தல் வேண்டும். | --- | --- | 1 | 1 | --- | 2 |
| 28 | தானியங்கி இயந்திர தொழில்நுட்ப கற்கைகள் (Automobile Studies) | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் தானியங்கி இயந்திர தொழில் நுட்ப பாடத்தில் குறைந்தது 30 சராசரி தர புள்ளி (credits) பெற்றுள்ள இளமாணிப் பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>**அல்லது**<br><br>ஏதேனும் இளமாணிப் பட்டத்துடன் அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் தானியங்கி இயந்திர தொழில்நுட்ப பாடத்தில் ஒரு வருடத்துக்கு குறையாத டிப்ளோமாவை பெற்றிருத்தல் வேண்டும். | 1 | 1 | 4 | --- | 3 | 9 |
| 29 | மின் மற்றும் இலத்திரனியல் தொழில்நுட்பக் கல்வி (Electrical and Electronic studies) | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் மின் மற்றும் இலத்திரனியல் தொழில்நுட்பம் தொடர்பான பாடத்தில் குறைந்தது 30 சராசரி தர புள்ளி (credits) பெற்றுள்ள இளமாணிப் பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>**அல்லது**<br><br>ஏதேனும் இளமாணிப் பட்டத்துடன் அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் மின் மற்றும் இலத்திரனியல் தொழில்நுட்ப பாடத்தில் ஒரு வருடத்துக்கு குறையாத டிப்ளோமாவை பெற்றிருத்தல் வேண்டும். | 1 | --- | --- | 2 | 1 | 4 |
| 30 | புடவை மற்றும் ஆடைத்தொழில்நுட்ப கற்கைகள் (Textile and Apparel Studies) | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் புடவை மற்றும் ஆடைகள் தொடர்பான பாடத்தில் குறைந்தது 30 சராசரி தர புள்ளி (credits) பெற்றுள்ள இளமாணிப் பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>**அல்லது**<br><br>ஏதேனும் இளமாணிப் பட்டத்துடன் அரச அங்கீகாரம் பெற்ற SLITA / ஏதேனும் நிறுவனத்தில் புடவை மற்றும் ஆடைகள் பாடத்தில் ஒரு வருடத்துக்கு குறையாத டிப்ளோமாவை பெற்றிருத்தல் வேண்டும். | 1 | --- | 2 | --- | 1 | 4 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 31 | உலோக நிர்மாண தொழில்நுட்ப கற்கைகள் (Metal Fabrication Studies) | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் உலோக நிர்மாணம் தொடர்பான பாடத்தில் குறைந்தது 30 சராசரி தர புள்ளி (credits) பெற்றுள்ள இளமாணிப் பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>**அல்லது**<br><br>ஏதேனும் இளமாணிப் பட்டத்துடன் அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் உலோக நிர்மாணம் பாடத்தில் ஒரு வருடத்துக்கு குறையாத டிப்ளோமாவை பெற்றிருத்தல் வேண்டும். | --- | 3 | 1 | --- | --- | 4 |
| 32 | அலுமினியக் கட்டுமான தொழில்நுட்ப கற்கைகள் (Almininum Fabrication Studies) | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் அலுமினியக் கட்டுமானம் தொடர்பான பாடத்தில் குறைந்தது 30 சராசரி தர புள்ளி (credits) பெற்றுள்ள இளமாணிப் பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>**அல்லது**<br><br>ஏதேனும் இளமாணிப் பட்டத்துடன் அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் அலுமினிய கட்டுமான பாடத்தில் ஒரு வருடத்துக்கு குறையாத டிப்ளோமாவை பெற்றிருத்தல் வேண்டும். | --- | 1 | 1 | 1 | 1 | 4 |
| 33 | கணனி வன்பொருள் மற்றும் வலையமைப்பு (Computer Hardware & Networking -(Web Designing & Software Development)) | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் கணனி வன்பொருள் மற்றும் வலையமைப்பு தொடர்பான பாடத்தில் குறைந்தது 30 சராசரி தர புள்ளி (credits) பெற்றுள்ள இளமாணிப் பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>**அல்லது**<br><br>ஏதேனும் இளமாணிப் பட்டத்துடன் அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் கணனி வன்பொருள் மற்றும் வலையமைப்பு பாடத்தில் ஒரு வருடத்துக்கு குறையாத டிப்ளோமாவை பெற்றிருத்தல் வேண்டும். | --- | --- | 1 | --- | --- | 1 |
| 34 | உற்பத்தி (Manufacturing) | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் உற்பத்தி தொடர்பான பாடத்தில் குறைந்தது 30 சராசரி தர புள்ளி (credits) பெற்றுள்ள இளமாணிப் பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>**அல்லது**<br><br>ஏதேனும் இளமாணிப் பட்டத்துடன் அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் உற்பத்தி பாடத்தில் ஒரு வருடத்துக்கு குறையாத டிப்ளோமாவை பெற்றிருத்தல் வேண்டும். | --- | 2 | 2 | --- | --- | 4 |
| 35 | விசேட கல்வி ஆசிரியர்கள் (Special Education) | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் விசேட கல்வி தொடர்பான பாடத்தில் குறைந்தது 30 சராசரி தர புள்ளி (credits) பெற்றுள்ள இளமாணிப் பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>**அல்லது**<br><br>விசேட கல்வி தொடர்பான ஏதேனும் பட்டம் / பேச்சு மற்றும் கேட்டல் விஞ்ஞானம் தொடர்பான விஞ்ஞானமாணிப்பட்டம் / உளவியல் / உளவியல் மற்றும் உள்ளடங்கல் கல்வி பாடத்தில் 30 சராசரி தர புள்ளி (credits) பெற்றுள்ள பட்டத்தை அரச அங்கீகாரம் பெற்ற ஏதேனும் நிறுவனத்தில் பெற்றிருத்தல் வேண்டும். | 7 | 14 | 16 | --- | 5 | 42 |
| **மொத்த வெற்றிடங்கள்** | | | | | | | | **388** |

**EX/Rec/25/01**

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கிழக்கு மாகாண, மாகாணப் பாடசாலைகளில் நிலவுகின்ற சிங்கள மற்றும் தமிழ் மொழிமூல ஆசிரியர் வெற்றிடங்களுக்காக (2023 மற்றும் 2024ம் ஆண்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் ஆட்சேர்ப்பு செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்ட வெற்றிடங்களில் மீதி வெற்றிடங்களுக்காக) இலங்கை ஆசிரியர் சேவை 3-I(அ) தரத்துக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை – 2025**

***பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :***
தமிழ் - **T**, சிங்களம் - **S**
(உரிய எழுத்தை கூட்டினுள் இடவும்)

***பரீட்சைக்கு தோற்றும் நகர எண் :***
(10 வது பந்தியில் குறிப்பிடப்பட்ட பரீட்சை நகர இலக்கத்தைக் குறிப்பிடுக.)

**நிரந்தர வதிவிட மாவட்டம் : ................................**

**மாவட்டத்தில் வதியும் காலம் (வருடங்களில்) : ..................**

விண்ணப்பிக்கும் பாடம் : (அட்டவணை 01 இற்கு அமைவாக குறிப்பிடவும்)

| பாடம் | பாட இலக்கம் |
|---|---|
| | |
| | |

விண்ணப்பிக்கும் மாவட்டம் :

1. .........................................................
2. .........................................................

**1.0.** 1.1. முதலெழுத்துக்களுடன் பெயர்: Rev./Mr./Mrs./Miss./ :.................................................................
*(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) (உதா : PERERA, A.B.C)*

1.2. முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் :.................................................................
*(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)*

1.3. முழுப்பெயர் :.................................................................
*(சிங்களத்தில்/தமிழில்)*

1.4. பால் : (பெண் - F / ஆண் - M)
*(உரிய எழுத்தை கூட்டினுள் இடவும்)*

1.5. தொலைபேசி இல :.................................................................

**2.0.** 2.1. நிரந்தர முகவரி :.................................................................
*(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)*

2.2. நிரந்தர முகவரி : :.................................................................
*(சிங்களத்தில்/தமிழில்)*

2.3. அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி :.................................................................
*(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)*

**3.0.** 3.1. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

3.2. பிறந்த திகதி : ஆண்டு [ ][ ][ ][ ] மாதம் [ ][ ] திகதி [ ][ ]

3.3 **19.05.2025**ம் திகதியன்று வயது : வருடங்கள் [ ][ ] மாதங்கள் [ ][ ] நாட்கள் [ ][ ]

**4.0.** இனம் : சிங்களவர் [ ] இலங்கைத்தமிழர் [ ] முஸ்லிம் [ ] வேறு [ ]

(உரிய கூட்டினுள் ✓ இடவும்)

**5.0.** கல்வித்தகைமைகள் :

5.1. க.பொ.த (சா/த) பரீட்சை பற்றிய விபரம் :

I. பரீட்சையின் வருடம் :.........................

II. பரீட்சை சுட்டிலக்கம் .........................

III. பெறுபேறு

| பாடம் | பெறுபேறு | பாடம் | பெறுபேறு |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

5.2. க.பொ.த (உ/த) பரீட்சை பற்றிய விபரம் :

I. பரீட்சையின் வருடம் :.........................

II. பரீட்சை சுட்டிலக்கம் :.........................

III. பெறுபேறு

| பாடம் | பெறுபேறு | பாடம் | பெறுபேறு |
|---|---|---|---|
| 1. | | 3. | |
| 2. | | 4. | |

5.3 பட்டம் பற்றிய விபரம் :

5.3.1. பட்டம் :……………………………………………………..

5.3.2. பல்கலைக்கழகத்தின் / நிறுவனத்தின் பெயர் :……………………………………………………..

5.3.3. பட்டம் வலுப்பெறும் திகதி :……………………………………………………..

5.3.4. பட்டத்தின் பிரதான பாடம் / பாடங்கள் :…………………………………………………….

5.3.5. பட்டத்தின் வகை : உள்வாரி ( ) வெளிவாரி ( ) (உரிய கூட்டினுள் ✓ இடவும்)

**5.4** டிப்ளோமா பற்றிய விபரம் :

5.4.1. டிப்ளோமா :……………………………………………………..

5.4.2. நிறுவனத்தின் பெயர் :……………………………………………………..

5.4.3. டிப்ளோமா வலுப்பெறும் திகதி :……………………………………………………..

5.4.4. டிப்ளோமாவின் கால அளவு :……………………………………………………..

**6.0** அரச / கிழக்கு மாகாண பொதுச்சேவையை சேர்ந்தவராயின்,

6.1. திணைக்களம் / அலுவலகம் :……………………………………………………..

6.2. தற்போதைய பதவி :……………………………………………………..

6.3. இச்சேவையில் நிரந்தரமாக்கப்பட்ட திகதி :……………………………………………………..

6.4. முதல் நியமனத் திகதி :……………………………………………………..

**7.0** நீங்கள் இலங்கை நீதிமன்றம் ஒன்றில் எப்போதாவது குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளீரா?
அவ்வாறெனின் விபரத்தைக் குறிப்பிடுக……………………………………………………………….............................
……………………………………………………………………………………………………………………

**8.0** பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட (தெளிவான விபரங்களுடன்) பற்றுச்சீட்டினை உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டவும்.

| |
|---|
| பற்றுச்சீட்டு மூலப்பிரதியினை கழராதவாறு இங்கு ஒட்டவும் |

**9.0 விண்ணப்பதாரரின் உறுதியுரை :**

(அ) இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்ட விபரங்கள் எனது அறிவிற்கு எட்டிய வரையில் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் நான் இத்தால் வெளிப்படுத்துகின்றேன். இதில் ஏதேனுமொரு பகுதி பூர்த்தி செய்யப்படாததன் அல்லது எவையேனும் தகவல்கள் பிழையாகச் சேர்க்கப்பட்டுள்ளதன் விளைவாக ஏற்படக்கூடிய ஏதாவது இழப்பை நான் ஏற்றுக்கொள்வதற்கு உடன்படுகின்றேன். மேலும் இங்கு அனைத்து பகுதிகளையும் சரியாக பூர்த்தி செய்துள்ளேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஆ) என்னால் செய்யப்பட்ட இக்கூற்று பொய்யானவை எனத் தெரியவந்தால் நியமனத்திற்கு முன்னரான தகைமை நீக்கத்திற்கும், நியமனத்திற்குப் பின்னர் தெரியவந்தால் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

(இ) மேலும் இப்பரீட்சை நடாத்துதல் தொடர்பாக கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு அமைந்தொழுகுவேன் என்றும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஈ) இதில் தரப்பட்டுள்ள தகவல்கள் எதனையும் பின்னராக மாற்றம் செய்யமாட்டேன்.

…………………………………

திகதி : ……………………  விண்ணப்பதாரியின் கையொப்பம்

**10.0 விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :** (இவ்வறிவித்தலின் 3.5/3.6 இன்படி)

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு/திருமதி/செல்வி ………………………………. என்பவர் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும், அவர் தனது கையொப்பத்தை எனது முன்னிலையில் ……………………………. ஆந் திகதியில் இட்டார் என்றும், உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளார் என்றும், அப்பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

…………………………………

திகதி : ………………………  கையொப்பத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரது கையொப்பம்.

கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின்

பெயர் : …………………………….

பதவி : ………………………………………………………….

முகவரி : ……………………………………………………….

(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)

**11.0 திணைக்களத் தலைவரின் உறுதியுரை :** (அரச/கிழக்கு மாகாண பொதுச்சேவையிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கானது)

இத்திணைக்களத்தில் …........................................................................................ பதவியில் கடமையாற்றும் திரு/திருமதி/செல்வி …......................................................................... அவர்களின் விண்ணப்பத்தை சிபார்சு செய்து சமர்ப்பிக்கின்றேன். அவரின் சேவைக்காலத்தில் எந்தவொரு ஒழுக்காற்று நடவடிக்கைகளும் அவர் மேல் இல்லையென்றும், அவரால் தெரிவிக்கப்பட்டுள்ள மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அனைத்தும் அவரின் சுயவிபரக்கோவையின்படி சரியெனவும், அவர் விண்ணப்பித்துள்ள பதவிக்கு தெரிவு செய்யப்படுமிடத்து அவரை அப்பதவிக்கு விடுவிக்க முடியும் என்பதையும் இங்கு அவரால் குறிப்பிடப்பட்ட விடயங்கள் யாவும் சரியானவை என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

……………………………………

திகதி : ………………………  திணைக்களத்தலைவரின் கையொப்பம்

கையொப்பத்தை உறுதிப்படுத்தும்

உத்தியோகத்தரின் முழுப் பெயர் : …………………………….

பதவி : ………………………………………………………….

முகவரி : ……………………………………………………….

(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)